Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.2, SRIVILLIPUTTUR
CC NO. 231/2020

**Depostitions of PW- 4 Witness for**

| | |
|---|---|
| Name | பீமாராஜா |
| Father's name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 9th day of January 2024.

Signature of Witness.

09.01.2024

எதிரி ஆஜர் .

**முதல் விசாரணை-**

நான் மம்சாபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் ஓவிய ஆசிரியராக பணிபுரிந்து தற்போது ஓய்வு பெற்றுவிட்டேன். என்னிடம் காட்டப்படும்பார்வை மகசரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான். நான் 4 வருடங்களுக்கு முன்பு அ.சா. 1 காமராஜ் கடை முன்பு ஒரு நாள் மதியம் 01.45 மணிக்கு நடந்து சென்று கொண்டிருந்தபோது அந்த இடத்தில் கூட்டமாக இருந்தது. நான் என்னவென்று விசாரித்தேன். பணம் திருடுபோய்விட்டதாக சொன்னார்கள். நான் எங்கு வைத்து கையெழுத்து போட்டேன் என்று நியாபகம்

இல்லை. போலீசார் கேட்டதால் கையெழுத்து கேட்டதால் போட்டுக்கொடுத்தேன். களவு போனது சம்மந்தமாக கையெழுத்து போட்டேன். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள். **பார்வை மகசரில் உள்ள முதலாவது கையெழுத்து மட்டும் அ.சா. ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்கக்கோரி அரசு தரப்பில் அனுமதி கேட்டதன் பேரில் அனுமதிக்கப்பட்டு சாட்சி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்,**

**<u>அரசு தரப்பில் குறுக்குவிசாரணை-</u>**

போலீசார் சம்பவஇடத்தில் படம் வரைந்தார்களா என்றால் நான் பார்க்கவில்லை. 29.12.2019 அன்று காலை 07.15 மணிக்கு நான் காமராஜ் கடை முன்பு நின்றபோது அந்த இடத்தை போலீசார் என் முன்னிலையில் பார்வையிட்டு ஒரு வரைபடம் வரைந்து பார்வை மகசர் தயார் செய்தார்கள் என்றும், அதில் நான் சாட்சியாக கையெழுத்து செய்து விட்டு தற்போது எதிரிக்கு ஆதராவக உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>-**

வாய்ப்பு கொடுத்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.